# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,

## KRISHNAGIRI

## Session Case No. 268 of 2022

Prosecution witness LW3 (PW6) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 24.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.ஹிலியாஸ் | Father Name | : | திரு.சையது பசீர் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் சாணசந்திரன் சுண்ணாம்பு சூளையில் வசிக்கிறேன் . நான் கூலி வேலை செய்கிறேன் . என் உடன் பிறந்தவர்கள் 10 பேர் சல்மா என்னுடைய முதல் அக்கா. என் அக்காவின் கணவர் பெயர் யாரப் .என் அக்கா கணவர் கூலி வேலை செய்து வந்தார். என் அக்காவின் கணவர் அவருடைய நண்பர் கவுஸ் கான் என்பவரின் பழகி வந்தார் .சும்மார் ரெண்டு வருடங்கள் முன்பு கவுஸ் கான் மனைவி இறந்துவிட்டார் . கவுஸ் கான் அவர் மனைவியை கொலை செய்துவிட்டார் . அவர் மனைவி மீது கவுஸ் கானுக்கு சந்தேகம் இருந்தது அதனால் கொலை செய்துவிட்டார் . 01.04.2022 தேதி அன்று குல்லா வீட்டின் அருகே என் மாமா யாரபை அடித்து போட்டு இருந்தார்கள் . என் மாமாவை யார் அடித்தார்கள் என்பது நான் பார்க்கவில்லை . என் மாமா யார் கொலை செய்தார்கள் என்று சரியாக தெரியவில்லை . கவுஸ்கான்

மனைவியுடன் என் மாமா தொடர்பில் இருந்ததாக நிறைய பேர் பேசிக்கொண்டார்கள்.

<u>சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

போலீஸ் விசாரணையில் கடந்த 01.04.2022 தேதி குல்லா வீட்டின் அருகே சண்டை போடும் சத்தம் கேட்டு நானும், அஸ்மா மற்றும் சிலரும் போய் பார்த்தபொழுது என் மாமா யாரப் தலைமுடியை பிடித்துக்கொண்டு சந்தோஷ் வீட்டில் இருந்து வெளியே வந்தார் என்றும் , அப்பொழுது குல்லா (எ) சந்தோஷ் என் மாமாவை இரும்பு பம்பரால் என் மாமாவின் தலைமீது சரமாறியாக அடித்துகீழே தள்ளி அங்கு இருந்த கடப்பா கல்லை எடுத்து என் மாமாவின் தலைமீது போட்டார் என்றும், என் மாமா மூச்சுப்போச்சு இல்லாமல் இறந்துகிடந்தார், என்றும், குல்லா அங்கு இருந்த பம்பரை எடுத்துக்கொண்டு கிழக்கு பக்கமாக ஓடிவிட்டார் என்றும், இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் விசாரித்தபோது சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி சம்பவத்தை நேரில் பார்ககவில்லை என்று பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலல் அது தவறு

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.25 15:59:00 +0530